# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதளமுகவரி: www/tnlbo.tn.gov.in

**முன்னிலை: திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.237/மா/2024**

**நாள்: 09.12.2024**

திரு.M.கமலக்கண்ணன் ............ மனுதாரர்
சென்னை – 100.

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் ........... எதிர்மனுதாரர்
கழிவு நீர் அகற்றும் வாரியம், சென்னை.

சென்னை, பள்ளிக்கரணை, வரதராஜபுரம் மெயின் ரோடு, மனை எண்.24–B,என்கிற முகவரியில் வசிக்கும் திரு.M.கமலக்கண்ணன் என்பவரின் 30.09.2024 நாளிட்ட மனு 30.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 237/மா/2024 என எண்ணிட்ட மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, பள்ளிக்கரணை, வரதராஜபுரம் மெயின் ரோடு, மனை எண்.24–B,என்கிற முகவரியில் வசிக்கும் திரு.M.கமலக்கண்ணன் என்பவர் 30.09.2024 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“எனது அம்மா பெயரில் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் அட்டை எண்.14/190/05843/000 எம்.எட்டியம்மாள் பெயரில் வரி செலுத்தி வருகிறோம். ஆனால் இது நாள் வரை குடிநீர் வரவில்லை. தற்போது புதிய குடிநீர் இணைப்பு தருகிறார்கள். அதனால் நாங்கள் புதிய குடிநீர் இணைப்பு வேண்டி ஆன்லைனில் 01.07.2024 பதிவு செய்தோம். எங்களின் வீட்டின் அளவு நீளம் 16 அடியும், அகலம் 30 அடியும் உள்ளது. மொத்தம் 480 சதுர அடியாகும். நாங்கள் கணக்கீடு செய்யும் போது எங்களுக்கு எல்லை கற்கள் அளவீடு செய்து தான் கணக்கீடு செய்ய தெரியும். அந்த அடிப்படையிலே நாங்கள் 480 சதுர அடி ஆன்லைனில் பதிவு செய்துள்ளோம். ஆனால் சென்னை மாநகராட்சி நாங்கள் பதிவு செய்ததில் தவறுகள் உள்ளது என்றும் சொத்து வரி 550 சதுர அடி உள்ளது என்று 190 வார்டு டிப்போ பொறியாளர் அலுவலர் அவர்கள் எனது அம்மா பெயரில் ரூ 4,900/– அபராதம் மற்றும் புதிய குடிநீர் இணைப்புக்கு ரூ 5,000/– செலுத்த வேண்டும் என்றும் ரூ 10,894/– ரோடு கட்டிங் செலுத்த வேண்டும் (190 Metro Water AE) சொன்னார்கள். அவர்கள் நேரில் வந்து கள ஆய்வு செய்யாமல் அபராதம் விதித்துள்ளார்கள். தாங்கள் விசாரணை செய்து எங்களுடைய பணத்தை ரூ 4,900/– திரும்ப வழங்க வேண்டி கோரிக்கை மனு 29.07.2024 அன்று இயக்குநர் அலுவலகத்தில் கொடுத்திருந்தேன். இதுவரை என் மனுவின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை“. அதனால் என் மனுவின் மீது நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

3) மனுதாரரின் கோரிக்கையை ஆய்வு செய்ததில் மனுதாரரின் கோரிக்கை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்திற்கு உட்பட்டது என்பது அறிய முடிகிறது.

4) இம் மாதிரி நிகழ்வுகளில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014 விதி 2 (7) –ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>பிரிவு 2 (7) Local body means</u>

(i) The Municipal Corporation of Chennai, Madurai, Coimbatore, Tiruchirappalli, Tirunelveli, Salem, Tiruppur, Erode, Vellore, Thoothukudi, Thanjavur, Dindigul or any other Municipal Corporation that may be constituted under any law for the time being in force, or

(ii) A Municipal Council Constituted under the Tamil Nadu District Municipalities Act 1920 or

(iii) A District Panchayat Constituted under the Tamil Nadu Panchayats, Act 1994.

5) எனவே, மனுதாரரின் புகார் மனு மேற்கண்ட பிரிவின் வரம்பிற்குள் வராததால், மனுதாரரின் 30.09.2024 நாளிட்ட புகார் மனு மீது நடவடிக்கை எடுக்க வழிவகை இல்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

6) மனுதாரர் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தினை அணுகி தக்க நிவாரணம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
1) திரு.M.கமலக்கண்ணன்,
மனை எண்.24B, வரதராஜபுரம் மெயின் ரோடு,
பள்ளிக்கரணை, சென்னை–600 100.

2) இயக்குநர்,
சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீர் அகற்றும் வாரியம்,
எண்.1, பம்பிங் ஸ்டேசன் சாலை,
சிந்தாரிப்பேட்டை, சென்னை–600 002.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

10/12/24